செய்தி வெளியீடு எண்.859 நாள்.14.10.2008

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன் அவர்கள் 14.10.2008 அன்று, சென்னை, தேனாம்பேட்டை, .அண்ணாசாலையில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் வானவில் விற்பனை நிலையத்தில் ஆடவர் ஆடை சிறப்பு கைத்தறிக் கண்காட்சி மற்றும் விற்பனையைத் துவக்கி வைத்தார்கள்.

----

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், புதிய வடிவமைப்புகளில் எழில்மிகு வண்ணக் கலவைகளில், பட்டு, பருத்தி மற்றும் கலப்பிழைகளைக் கொண்டு எண்ணற்ற புத்தம்புது சேலை இரகங்களை உருவாக்கி வாடிக்கையாளர்களின் மாறிவரும்இரசனைக்கேற்ப வெளியிட்டு வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்த சீரிய முயற்சியின் பலனாக, மயில் தோகை பட்டுச் சேலை, மாஜிக் பட்டுச் சேலை, இராயல் அடுக்குத் துகில் பட்டுச் சேலை, சுடர்க்கொடி பட்டுச் சேலைகள், கோலங்கள் பட்டுச் சேலைகள் போன்ற பட்டுச் சேலைகளின் தொகுப்புகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டன.

அதேபோல், தீபவளி 2008 விழாக்கால விற்பனையை முன்னிட்டு, அங்கையர்க்கண்ணி பருத்தி பட்டுச் சேலைகள், கோதை பருத்தி சேலைகள், இரங்கா பருத்தி சேலைகள், சிறுமுகை பருத்தி சேலைகள். பரமேஸ்வரி பருத்தி சேலைகள், தணிகை பருத்தி சேலைகள், மாங்கனி பருத்தி சேலைகள், வண்ண மயில் பட்டுச் சேலைகள், தீபம் பருத்தி பட்டுச் சேலைகள் மற்றும் "ஒலியும்–ஒளியும்" பட்டுச் சேலைகள் ஆகியவை வெளியிடப்பட்டு, வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வருகிறது.

புதிய வடிவமைப்புகளை சேலைகளில் உருவாக்கி, மகளிரின் துணித் தேவைகளை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் பூர்த்தி செய்து வருகிறது. மேலும் ஆடவரின் துணித் தேவைகளுக்கும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் உரிய முன்னுரிமை அளித்து வருகிறது.

ஆடவரின் தேவையையும் இரசனையையும் பூர்த்தி செய்யும் வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில், கீழ்காணும் ஆயத்த சட்டை இரகங்களின் தொகுப்புகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டு, வாடிக்கையாளர்களின் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

100% கிளாசிக் காட்டன் சட்டைகள்
அரோமா சட்டைகள்
மார்பிள் சட்டைகள்
டெனிம் சட்டைகள்
கோல்டன் ரேய்ஸ் சட்டைகள்
ரெயின் டிராப்ஸ் சட்டைகள்
பிளாட்டினம் சட்டைகள்
ஆர்கானிக் காட்டன் சட்டைகள்
தூய பட்டுச் சட்டைகள்

இந்த இரகங்கள் மட்டுமின்றி, குர்தா, பைஜாமா போன்ற ஆயத்த ஆடை வகைகளும் ஆடவருக்காகவே பிரத்தியேகமாக விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ளது.

புதிய வடிவமைப்புகளுக்கு வாடிக்கையாளர்களின் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் (2008–09), 2000–க்கும் மேற்பட்ட புதிய வடிவமைப்புகளை எழில்மிகு வண்ணக் கலவையில் புதிய இரகங்களை அறிமுகப்படுத்த கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதுவரை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இரகங்கள் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் தீபாவளி விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு தீபாவளி

விழாக்கால விற்பனைக்கு மகளிருக்காக பிரத்தியேக சேலை இரகங்கள் வெளியிட்டுருப்பதைப் போல், ஆடவர்களுக்கும் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கீழ்காணும் புதிய சட்டை இரகங்கள் இக்கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

டாபி டிஸைன் காட்டன் சட்டைகள்

கைத்தறியின் பாரம்பரிய மிக்க டாபி டிஸைனில் உருவாக்கப்பட்ட 100% பருத்தி நூலால் தயார் செய்யப்பட்ட ஆடவர் ஆயத்த சட்டைகள் "ஜியோ" என்று பெயரிடப்பட்டு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் நிகர விலை அரைக்கை சட்டைக்கு ரூ.423/-, முழுக்கை சட்டைக்கு ரூ.453/- இருக்கும்.

லினன் (Linen) சட்டைகள்

சுற்றுச் சூழல் மற்றும் தேக ஆரோக்கிய நலன் கருதி பருத்திக்கு ஈடாக, உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்டு, வரவேற்கப்படும் இரசாயன கலப்பில்லா லினன் இழைகளால் தயார் செய்யப்பட்ட "எக்கோ லினன்" சட்டைகள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் நிகர விலை ரூ.333/- அரைக்கை சட்டைக்கும், ரூ.370/- முழுக்கை சட்டைக்கும் ஆகும்.

சூட்டிங் இரகங்கள்

ஆடவர்க்கு ஆயத்த சட்டை மட்டுமின்றி, 100% பருத்தி நூலால் தயார் செய்யப்பட்ட செல்ப் டிஸைன் (Self Design Suitings) சூட்டிங்குகளையும், வசீகரிக்கும் ஐந்து வித வடிவமைப்புகளில் கண்கவர் வண்ணங்களில் தயாரிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன் நேர்த்திமிகு கைலி இரகங்கள், வேட்டிகள், துண்டுகள் மற்றும் சட்டைத் துணி இரகங்கள் ஆகியவையும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆடவர்களுக்கு மட்டுமின்றி, மகளிருக்குண்டான கோ-ஆப்டெக்ஸின் சிறந்த வடிவமைப்புடனும், வனப்புடனும் பல வண்ண பருத்தி சேலைகள், பட்டு சேலைகள், சுடிதார் இரகங்கள், படுக்கை விரிப்புகள் ஆகியனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஒலியும் ஒளியும் பட்டு சேலைகள் 18.9.2008 அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோல் சிறார்களுக்காக ஒலியும் ஒளியும் பட்டு பாவாடை இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

நடப்பாண்டில் தீபாவளி விற்பனை கால விற்பனை குறியீடாக ரூ.60 கோடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 18.9.2008 தொடங்கிய விற்பனை மிக சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.20.00 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. மீதமுள்ள நாட்களில் ரூ.40.00 கோடி அளவிற்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஆடவர்க்கென தனிச்சிறப்பு மிக்க "ஆடவர் ஆடை சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி மற்றும் விற்பனையை" தீபாவளி 2008 விழாக்காலத்தை முன்னிட்டு, மாண்புமிகு தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் 14.10.2008 அன்று சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் வானவில் விற்பனை நிலையத்தில் துவக்கி வைத்து முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவிற்கு, தமிழ் நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலர், திரு விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்கள். கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திருமதி ஆர்.ஜெயா, இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்கு முன்னிலை வகித்தார்கள். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்று விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்புற செய்தார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.